**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.**

**முன்னிலை :திரு. ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**<u>குற்ற பல்வகை மனு எண். 36/ 2026</u>**

**குற்ற எண். 16/2026**

நாகராஜ் (எ) கூலை நாகராஜ்,

த/பெ.சண்முகம் ... மனுதாரர்/எதிரி/வழக்கு சொத்தின் உரிமையாளர்

**/எதிர்/**

அரசுக்காக அதன் பிரதிநிதி
காவல் ஆய்வாளர்
மாயனூர் காவல்நிலையம்
குற்ற எண்.16/2026 ...எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்

இம்மனு மீது இன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.A.வடிவேல் அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை எண்.1 திருமதி.S.பெரியமறத்தி அவர்கள் ஆஜராகியும் அவர்களின் வாதங்களை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/எதிரி/வழக்கு சொத்தின் உரிமையாளர் தரப்பில் Honda Dio Invoice No. TN42D2193 TVS Appache மஞ்சள் கலர் இரண்டு சக்கர வாகனம் மற்றும் Redmi 12 செல்போன் airbods ஆகியவற்றை இடைக்கால பராமரிப்பில் மனுதாரரிடம் ஒப்படைக்க உத்தரவிடக்கோரி குவிமுச பிரிவு 497 மற்றும் 503 – ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர்/எதிரி/வழக்கு சொத்தின் உரிமையாளர் ஆவார். மனுதாரர்

மேலும் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்படி பொருட்களை வைத்து எந்த குற்ற செயலும் செய்யவில்லை. ஆனால், காவல் துறையினர் மேற்படி பொருட்களை கைப்பற்றி வைத்துள்ளார்கள். அதனால், மனுதாரருக்கு அளவிட முடியாத இழப்பு ஏற்படும். குற்ற சம்பவத்திற்கும், வாகனத்திற்கும் தொடர்பு இல்லை. மேற்படி வாகனத்தை வைத்து தான் மனுதாரர் வாழ்ந்து வருகிறார். மனுதாரரின் வாகனம் காவல் நிலையத்தில், திறந்த வெளியில் வெயில், மழையினால் பாதிக்கப்பட்டு இயந்திர கோளாறு ஏற்படும் நிலை உள்ளது. மனுதாரருக்கு, இரண்டு சக்கர வாகனம் மற்றும் செல்போன், Airbods ஆகியவைகளை இடைக்கால பொறுப்பில் வழங்கினால் நீதிமன்ற நிபந்தனைகளை கடைபிடிக்க தயாராக உள்ளார். வழக்கு விசாரணைக்கு தேவைப்படும் பொழுது வாகனத்தை மனுதாரருக்கு ஒப்படைக்குமாறு உறுதி கூறுகிறார். அதனால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்</u>

**1)** எதிரி கூலைநாகராஜ் (எ) நாகராஜனுக்கு காட்டுப்புத்தூர் காவல் நிலையத்தில் 7 குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டது. மேலும், சரித்திர பதிவு தொடங்கி மனுதாரர் கண்காணிக்கப்பட்டு வருகிறார். வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது. வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். எதிரிகளால் சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்படுவதோடு சாட்சிகளை கலைக்க நேரிடும். மனுதாரர் கோரியுள்ள பொருட்களை எதிரியிடம் ஒப்படைத்தால் எதிரி தலைமறைவாக கூடும் என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2)** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இரண்டு சக்கர வாகனம் மற்றும் செல்போன், Airbods ஐ மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க வேண்டுமா? இல்லையா? என்பதை ஆகும்.

3) எதிரி மீது கடந்த 13.01.2026 ம் தேதி மாலை 04.45 மணியளவில் எதிரி அறுவறுக்கத்தக்க வார்த்தைகளால் திட்டி நிகழ்வுநிலை புகார்தாரரின் கணவரை கத்தியால் குத்தி காயம் ஏற்படுத்தி கொலை முயற்சி செய்து கொலை மிரட்டல் விடுத்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு ஆவணங்களில் இருந்து தெரிய வருகிறது.

4) மனுதாரர் தரப்பில் அவரது இரண்டு சக்கர வாகனம் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில், திறந்தவெளியில் நிற்க வைக்கப்பட்டு இயற்கை சீதோசத்தினால் சேதம் அடைய வாய்ப்பு உள்ளது என்றும், அதனால் மனுதாரரிடம் இடைக்கால பராமரிப்பில் ஒப்படைக்க கோரப்பட்டுள்ளது. இந்நீதிமன்றம் பார்வையிட்ட மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்ற தீர்ப்பான 2002 (10 SCC 283, Sundra bhai Ambalal Vs. State of gujarat என்ற முன் தீர்ப்பு வாகனம் பழுதடையாமல் இடைக்கால பாரமரிப்பில் ஒப்படைக்க வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை முடிய காலதாமதமாகும். அதுவரை காவல்நிலைய திறந்தவெளி வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் பாதிப்படைய வாய்ப்பு உண்டு. அதனால் மனுதாரரின் வசம் இடைக்கால பராமரிப்பில் வாகனத்தை ஒப்படைப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக இந்த மனு அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் படி இரண்டு சக்கர வாகனத்தை மனுதாரரின் இடைக்கால பராமரிப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.**

1. மனுதாரர் மற்றும் மனுதாரருக்காக ஒருவர் ரூ.2,10,000/–த்திற்கான பிணையப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

3. மனுதாரர் வாகனம் மற்றும் மேற்படி பொருட்கள் முன்னின்று இரண்டு பக்கமும் தெரிய கூடிய அளவில் புகைப்படங்கள் எடுத்து இந்திய சாட்சி சட்டம் பிரிவு 65B சான்றிதழ்களுடன் தாக்கல் செய்ய வேண்டும்.

4. மனுதாரர் சொத்தின் விவரங்கள் குறித்து பஞ்சனாமா தாக்கல் செய்ய வேண்டும்.

5. மனுதாரர் இந்த வாகனத்தை இனிவரும் காலங்களில் இதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபடுத்த மாட்டேன் என்று பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்ய வேண்டும். மேலும், மனுதாரர் தாக்கல் செய்யும் புகைப்படத்தில் உள்ள வாகனத்தின் அடையாளம் மற்றும் வாகனத்தின் உரிமை குறித்து மறுப்பு தெரிவிக்க மாட்டேன் என்று பிராமாண வாக்கு மூலம் தாக்கல் செய்ய வேண்டும்.

6. மனுதாரர் வசிப்பிடம் முகவரி மாற்றம் செய்தால் மாற்றப்பட்ட முகவரியை நீதிமன்றத்திற்கும் காவல் துறைக்கும் தெரிவிக்க வேண்டும்.

7. நீதிமன்ற அனுமதியின்றி வாகனத்தின் அமைப்பை மாற்றக் கூடாது மற்றும் உரிமை மாற்றம் செய்யக் கூடாது. வழக்கு விசாரணைக்கு தேவைப்படும் போது வாகனத்தை ஆஜர் செய்யவேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளின்படி இரண்டு சக்கர வாகனம் மற்றும் செல்போன், Airbods ஐ மனுதாரின் இடைக்கால பராமரிப்பில் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டசருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் பதிவு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு, இன்று 24.03.2026–ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் அவை அறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ
Digitally signed by RAMAIYAH BAGYARAJ
Date: 2026.04.01 07:06:26 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**